**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.112/2014**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | இளங்கோவன் ஜென்னிங்ஸ் | **Caste** | : | |
| **Father's Name** | : | எபி ஜான்சன் | **Calling** | : | துணைக்கண்காணிப்பாளர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | தஞ்சாவூர் | **Age** | : | **58/2026** |
| | | | **Dated** | : | **12.05.2026** |

**12.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 12 **திரு.இளங்கோவன் ஜென்னிங்ஸ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 10** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 07.07.2013ம் தேதி திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண்.252/2012 சட்டப்பிரிவுகள் 454, 380 இதவ வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளை தேடிவந்த நிலையில் திண்டுக்கல் நத்தம் ரோடு சிறுமலைப்பிரிவு அருகே நான் போலிஸ் பார்டியுடன் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எதிரி டி.வி.ஸ் TN 57 Q 8125 இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவரை நிறுத்தி விசாரிக்க

அவர் பெயர் கருணாகரன் என்றும் அவரின் வாகனத்தை சோதனை செய்தபோது டேங்க் கவரில் வைத்திருந்த ஒரு மஞ்சள் பையை சோதனை செய்தபோது பூட்டை உடைத்து திருடுவதற்கு தேவையான கம்பிகள், ஆக்ஷா பிளேட், சிறிய கத்தி, சாவிக்கொத்து மற்றும் நகைகளை அடகு வைத்த ரசீதுகள் ஆகியவை காணப்பட்டன. அவரை விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக தாடிக்கொம்பு காவல் நிலைய குற்றத்துடன் தொடர்பிருப்பதை தாமாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் தர தயாராக இருப்பதாக கூறினார். அதனடிப்படையில் சாட்சிகள் ஆரோக்கியசாமி, பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் கருணாகரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேலும் தன்னை அழைத்துச்சென்றால் எங்கு மறைத்துவத்திருந்த வழக்குச்சொத்துகளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அதனடிப்படையில் எதிரியை அழைத்துக்கொண்டு அவரின் சொந்த ஊரான சாணார்பட்டி வீட்டிற்கு அழைத்துச்சென்றபோது உள்ளே சென்று தனது பீரோவில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தங்கதோடு இரண்டு ஜோடி 2 பவுன் எடையுள்ளது, தங்க காசு 2 சுமார் 1/2 பவுன் எடைஉள்ளது. தங்க செயின் 2 1/2 பவுன் எடையுள்ளது. ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ய சாட்சிகள் பாலு, செல்லப்பாண்டி முன்னிலையில் அத்தாட்சி கைப்பற்றி கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்புவித்து இரவு நேரம் என்பதால் மறுநாள் காலை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சார்பு ஆய்வாளர் ராமகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்புவித்து RPR.18/2014 ஆக பதிவுசெய்தேன். பின்பு எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 454,380 இதச வாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் வழக்கு சம்பவம் நடைபெற்ற நாள் 14.05.2012 , 15.30 மணி என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு 6 மணிநேரம் காலதாமதமாக தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து வாகனத்தையோ அல்லது தணிக்கையில் கிடைக்கப்பெற்ற எதிரியின் பொருட்களையோ இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சேர்க்கவில்லை . வேறொரு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. சொன்ன நாள் நேரத்தில் எதிரியிடம் இருந்து எந்த வழக்குச்சொத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் திருடப்பட்ட பொருட்கள் 2 ஆண்டுகள் கழித்துதான் என்னிடம் கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல. 1 வருடம். இவ்வழக்கின் திருடப்பட்ட பொருட்கள் எதுவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார்தாரர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நான் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் எதிரியை சொன்ன இடத்தில் கைது செய்து அவரிடம் இருந்து வழக்குச்சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும் எதிரிமீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.12 12:11:23 +0530

Judicial Magistrate No.II
Dindigul.